7

உ

நாடக விகட ரஞ்சிதம் அல்லது

பபூன் பாட்டு

15 JAN 1931

மண்டபம், புக்ஷாப்,
டையா மணியகாரர்
ரஸில் பதிப்பித்தது.
1930. [விலை அணா 2.

0-,12
NBO.
184153

உ

கடவுள் துணை.

தமிழ் நாடக உலகத்தில் எல்லா பபூன்
ஆக்டர்களும் பாடிவரும் நவீன நாகரீக
வர்ணமெட்டுகளமைந்த

நாடக விகட ரஞ்சிதம் அல்லது

பபூன் பாட்டு

முதற்பாகம்

இது

நாடகத்துக் கின்றியமையாத நவசரங்களுள்-ஆஸ்யரசத்தை யளிக்கும், நாடக (டிராமா) பபூன்களுக்கு மிகமிகப் பயன ளிக்கத்தகுந்த, செந்தமிழ்ச்சுவை ததும்பும் பாடல்களமைந் தது. படிப்போர் கேட்போருக்கு இடைவிடாச் சிரிப்பை யுண் டாக்கவல்ல, விநோத விகடந்ததும்பியது.

இஃது

மதுரை, புதுமண்டபம், புக்ஷாப்,

☞ பெ. கருப்பையா மணியகாரர்

அவர்களால்

மதுரை,

ராஜேஸ்வரி பிரஸில் பதிப்பித்து வெளியிடலானது.

ரிஜிஸ்டர்] 1930. [விலை அணா 2.

 10412 நாடக விகட ரஞ்சிதம் அல்லது

சென்னை-600 008

காப்பு—வெண்பா

நாடகத்துக் கேற்றதொரு நாடகத்தி லேவிகடம்
பாடல்களை நாமுரைக்கப் பாலிக்கும்—கூடல்வளர்
வாரணத்துக் கேதனத்து வல்லோர்க்கு முந்திவந்த
வாரணத்தான் றன்கருணை வந்து.

தாயைத் தலை முடிபற்றி என்ற—மெட்டு

விகடனை யொரு கோமாளி யென்று
விளம்புவார்கள் தெரி யாதவர்கள்
வித்துவான்கள் கெர்வம் மட்டந்தட்டவந்த
வீரனுமென்பார் தெரிந்தவர்கள்
சகட மோடந்த ணிலேறு மோடம்
தானுமோர் நாட்சகடமேறும்
சாஸ்திர வாதத்தி லென்னைப்போலும் வெற்றி
தானடைந் தாருண்டோ நீர் கூறும்
முத்தமிழ் வித்வக்க விவாணர் தங்களை
முன்னறி தெய்வமா கத் தேடி
முட்டுப்பாடில்லாது கற்றுத்தெளிந்தோரே

2035 (அ)

முதல கோர்க்குத்த மிழ்க்ரீடி
பத்துப்பேர் குஸ்தியில் முன்னமே பீட்டடி
பட்டவனே தான்ப யில்வானும்
பாரினில் வெற்றியுந் தோல்வியுங்கண்டு
பகட்ட யில்லாதவன் வித்வானும்
ஆடை பட்டுப்பீதாம் பரங்கோட்டுக்கெடி
காரச் சங்கிலியோ டுசெவியில்
அற்புதமானக டுக்கணணிந்தாலும்
ஆக்டர்க ளாவாரோ இப்புவியில்
பாடைக்கம்புபோல நீண்டு செக்குப்போல்
பருத்திருந் தாலாகு மோவிற்பனம்
பாலர்களாயினும் வாக்குச் சமர்த்தராய்ப்
பாஷிப்பதே கெட்டிக்காரத்தனம்

நாட்கிழமை நக்ஷத்திரம் என்ற மெட்டு.

அஞ்சு மூணுங் கூட்டிவிட்டா
லாகுமே யெட்டு—கணக்
கானதிம் மட்டு—நாண
மானதை விட்டு—நீ
அத்தை மகளின் கழுத்தில்
தாலியைக் கட்டு
போனதைப் பொங்கலுக்கென்

நாடக விகட ரஞ்சிதம் அல்லது

புருஷனும் வாங்கித்—தந்த
புதுசுக் கண்டாங்கி—தீட்டாய்ப்
போனதா லேங்கி—வெளுக்கப்
போட்டேன் தந்தாளில்லை வண்ணாத்
திக்கென்ன ராங்கி
கட்டான கட்டழகி கனகரத்தினமே—நல்ல
காமச் சித்திரமே—உன்னைக்
காண இத்தினமே—மிகு
காதலானே னாதலாலே
கருதாய் முத்தனமே
காவலுக்குப் போன மச்சான்
வந்துசேரட்டும்—காசுக்
கென்ன செய்யட்டும்—நாசிக்
குப் பொடி மட்டும்—நீ
காலணாவுக் குவாங்கித்
தாநான் போகட்டும்

அற்பசுகத்துக்காக நஷ்டத்தை அல்லது
கவுனமிசேயாரே—என்ற மெட்டு.

கல்யாண முனைச் செய்துகொண்டதிக்
காலம் வந்திட்ட யோகம்—என்

பபூன் பார்ட்

காதலியே நீ பாடுவதெல்லாம்
கழுதைக் காம்போதி ராகம்
காத்திருந்தேனடி—மணம்
பார்த்திருந்தேனடி—அடி
கருப்புக்கட்டி நானுனக்குத்—தாரேன்
விருப்பமாய்த் தின்னுவதற்கு—அடி
காமரஞ்சித மேயடிக்கடி
நீ மயங்குத லெதற்கு

சம்புவே சதா நடித்த என்ற மெட்டு.

சட்டிப்பானை மண்ணிற் செய்தது
சந்தேகமில்லை—அதைக்
குட்டிப்பார்த்து வாங்குவோர்க்குச்
சந்தேகமில்லை
எட்டுரெண்டும் பத்தாதற்குச்
சந்தேகமில்லை—அதில்
எட்டுப்போனால் ரெண்டு மிச்சம்
சந்தேகமில்லை
பெட்டைக்கோழி முட்டையிடும்

சந்தேகமில்லை—அந்த

முட்டைக்குள்ளே குஞ்சிருக்கும்

சந்தேகமில்லை

செட்டி வீட்டில் வட்டியேறுஞ்

சந்தேகமில்லை—அங்கு

பட்டுக்கொண்டு பல்விளிப்பார்

சந்தேகமில்லை

சாப்பிட்டால்வ யிறுநிறையுஞ்

சந்தேகமில்லை—

சந்தேகமில்லை—சந்—சந் [சட்]

(ஆண் பெண் தர்க்கம்)

கல்யாணம் செய்துக்கோ என்ற மெட்டு,

கண்ணான கண்மணி கண்ணான கண்மணி கல்யாணப்பெண்மணி

கல்வேண்டா ஊனே மூக்குமணி

(அடி) பண்ணான ராகங்கள் பாடி—இங்கு

பண்பாயிருவருங் கூடி—உள்ள

பக்ஷம் பாராட்டியே

மெச்சுஞ் சீராட்டியே

படிப்போங் கொக் கோகநூல் பிராட்டியே

[கன்னத்தில்] முத்தாடு மாசையால்

முத்தாடு மாசையால்—பித்தானேனுதலால்

அத்தானெனைக் கூடவாருமே

[நல்ல] கொத்நாரும் பூமாலைசூடி

[நாம்] கொஞ்சும் பஞ்சணையத்தேடி

(ஸ்பென்சர்) கோலா லெமெனெட்டு

சோடா கலர்விட்டு

குடிப்போம் வெற்றிலைச்சுருள்

மென்றிட்டு

விண்டலமு மண்டலமும் என்ற மெட்டு.

மூட்டையுங் கொசுவுங்கூடி

வீட்டிலே மீட்டங்கி போட்டால்

முன்னே நிற்க யாரால் முடியும்—மாதம்

முப்பது நாளுந்தூக் கந்தான் வந்துசேரு

போபொழுதும் விடியும்—கொன்றால்

மூட்டையிலை யொன்றுமடியும்—அதன்

முன்னே காணரத்தம் வடியும்—அதில்
மூவாயிரம் நாலாயிரம் மூட்டைக ளொன்றுக்கக்கூடி
மொத்த மொத்தம் வந்து படியும்—கொசு
மோகனரா கம்போலே சத்தம்—போட்டு
முன்னே நின்று செய்திடும் யுத்தம்—சதா
முன்னும் பின்னு மாயிருந்து
சன்னஞ் சன்ன மாயுடம்பின்
முழுதுங் குடிக்குமே ரத்தம்

செஞ்சுருட்டி ராகம்.

சிட்டாஞ் சிட்டாஞ் சிட்டாஞ்
சிணுக்குத்தான்—அந்த
சின்னப்பிள்ளை அன்ன நடை
கணக்குத்தான்—அந்தச்
சேலத்திலே—மாவிடிக்கிற
காலத்திலே—கூழ்குடிக்கிற (சிட்)
(பல்) சிலுசிலுத்தா—படபடத்தா
அறுவறுத்தா—முணு முணுத்தா

184153

பல் பலே பலே—பலே பலே பலே (சிட்)

பட்டாசு வேட்டுக் கட்டுத் தாரேண்டி—என்

பக்கத்திலே குத்தவைச்சுப் பாரேண்டி—அந்தப்

பாட்டிமவ—காட்டுக்குள்ளே

12

சேட்டை மெத்த—காட்டுகிற (சிட்)

பல் பலே பலே—பலே பலே பலே

மேட்டுக்குப் பள்ளம்—போட்டுக்கோ தாளம்

மா—னே—மரகதமே (சிட்)

மோட்டாரு ரயிலு வண்டி ஏறலாம்—அந்த

முத்துப்பேட்டை சந்தைக்குப்போய்ச் சேரலாம்

தாட்டீகமாய்க் குலாவி நடக்கலாம்—நல்ல

சம்பங்கிப்பூக் கொண்டையிலே முடிக்கலாம்—அடி

சாமத்திலே—நீமதித்த—காமத்திலே—கேலிகொட்ட

சம்போசம் போசம்போ பலே பலே பலே

பல் பலே பலே அசக் அசக் அசக்தான் [சிட்]

செஞ்சுருட்டி தாளம் ஆதி.

[பல்லவி]

என்னைப்போலே சிப்பாயாருண்டு—உலகத்திலே [என்]

ஏழாநாள் செத்தபுலியை—எட்டிநின்று குத்திப்போட்டேன்
[என்]

அநுபல்லவி

பொன்னைப் பூவைப் பூமியை—போற்றி யிச்சை கொள்ள
[மாட்டேன்

போருக்குப் புறப்படென்றால்-நேருக்குநான் போகமாட்டேன்
(என்)

சரணம்

1 கொசுவைத் துப்பாக்கியாலே—குண்டுபோட்டுச் சுட்டுப்
போட்டேன்

கொண்ட பெண்டாட்டி கோபித்தால்—அண்டையிலே
போகமாட்டேன் (என்)

2 வல்லயத்தினாலநேகம்—பல்லிகளைக் கொன்ற வீரன்
மாண்ட மிருகந்தன்னைத்—தான்கண் டொழிக்குந்தீரன்
[என்]

போதை வஸ்துக்குண்டான மகிமை
என்ற மெட்டு.

பல்லவி

பூவின் விபரம் பலகோடி இதைப்
புகலுவ தென்றாலிந்த

மகிதலத்தி லருமை [பூவின்]

அநுபல்லவி

காவில்வளர் கொடிப்பூ கோட்டுப்பூ நிலப்பூ
கருதுநீர்ப் பூவொடு கழறும் பலவிதத்துப் [பூ]

சரணம்

சம்புத சம்பு பரம்பு விளம்பு
தண்ணீர் குடிக்கவுற்ற வெண்கலச் செம்பு
வம்பு குறும்பு திரும்பு வடம்பு
வாழை பலா தென்னஞ் சோலைக் கரும்பு
சம்பு பிறம்பு துரும்பு ததும்பு
கடினமுடைய லோகமான இரும்பு
நம்பு வரம்பு துருப்பு விருப்பு
நறுமணம் வீசிடும் பிச்சி யரும்பு
உப்பு கசப்பு புளிப்பு வுறைப்பு
ஓது மறுசுவையிற் சேரு திதிப்பு
செப்பு பசப்பு முடிப்பு மதிப்பு
செட்டி கடையிலுள்ள பெட்டி யிருப்பு
துப்பு வெளுப்பு சிவப்பு கறுப்பு
சுதிலய மேவுசங் கீதப் படிப்பு

அப்பு மிதப்பு குளிப்பு மடிப்பு
அதிரூப நாடக ஆண்பெண் நடிப்பு
இத்தனை பூவுக்குமே லிரவிற்கண் விழிப்பு
எடுத்து நான் சொன்ன தெல்லாம் தனிச்சந்தக் குழிப்பு
[பூ]

வனஜாக்ஷி என்ற மெட்டு.

பல்லவி

பெருங்காயம் பால் (பெருங்)

அநுபல்லவி

பெரிதான பெட்டி தலைமீதுவைத்து
மலையாளி மக்கள் விலைகூறி விற்கும் [பெ]

பருப்புக்கும் ரசத்துக்கும் சமைக்கவும் பொருத்தம்
பசிக்குத் தகுந்தபடி புசிக்கவுந் திருத்தம்
வருத்தும் வயிற்றுமப்பை யடிக்கவும் விருத்தம்
வாதபித்த ரோகமற்ற
சீதளத்தை யேகெடுக்கும் [பெ)

ஒப்பொடி யுழுந்த வடைகாராப் பூந்தி
உருளைக் கிழங்குஆம வடை சுய்யன் சாந்தி

நேமப்படியே செய்த பலகார மாந்தி
நேசியோடு ஆசைமிஞ்சு
ராசிபேசி யேசுகிக்கப் [பெ]
மோருக் குழம்பு சாப்பா ரூறுகாய்க் கூட்டு
முருக்கு கடலை சுண்டல் மணக்குமேற் பாட்டு
காரமிளகுவடை பச்சடிக்குந் தீட்டு
கணக்காய்போட்டு வசிக்கும்வீட்டில்
புசிக்கத்தாட்டு ருசிக்க மாட்டு [பெ]

தெப்பாங்கு மெட்டு.

(மதுரை திருவிழாச் சிறப்பு)

கண்ணிகள்

மதுரைக்கு நேர்கிழக்கு அன்னமே தங்கம்
(அங்கே) வண்டியூருத் தெப்பக்குளம் அன்னமே தங்கம்
புதுமையா யிருக்குதந்தத் தெப்பத்திலே தைப்
பூசத்திலோர் வருஷத்திலே கூட்டத்திலே
(சொக்கர்) போய்வரும் விநோதம் அதைப்
புகலுதல் பிரமாதம் அடி
ஆயிழை நன்னீதம் மீ
னாக்ஷியின் ப்ரசாதம் அடி
அற்புதமானதடி சின்னடோக்ளா
சின்னடோக்ளா அது

ஆருக்குங் கிடைக்குமடி

(எங்கள்) ஆத்திலழகரும் வைகையிலே   வரும்

அழகான சித்திரை மாசத்திலே   அது

பார்த்தால் ஜொலிக்கு மிறங்கையிலே   மாயன்

பவனி வருகிற நேர்த்தியிலே   ஜனம்

பத்துலக்ஷங் கோடி   அங்கே

பார்க்கவாரார் தேடி   வந்து

எத்திசையுங் கூடி   இ

சைப்பார் கவிபாடி   அது

என்னவிநோதமடி   சின்னடோக்ளா

சின்னடோக்ளா   அதற்

கீடேது சாக்ஷியடி

பிட்டுத் திருவிழாக் காட்சிதானே   சொக்கர்

பிறம்பாலடிபட்ட சூழ்ச்சிதானே   அது

மட்டில்லாமலெங்கும் பட்டதடி   கூடல்

மன்னன் பாண்டியன்கை தொட்டதடி   கிழ

வந்திகூலி வாங்கி   வைகை

மண்சுமக்கத் தாங்கி   பெருங்

தொந்தி வயிறேங்கி சு

மந்து கொஞ்சக் தூங்கி எங்கள்

சொக்கரிருக்கு நேர்த்தி சின்னடோக்ளா

சின்னடோக்ளா என்ன

சொல்வேன் கருணைமூர்த்தி

தங்கரத்தின மெட்டு.

கலியுகக் காட்சி

1 கலிகாலச் சேதிபிலே

காணுமிந்தக் காலத்திலே

வலுவான ஏரோபிளான் தங்கரத்தினமே

வந்து வந்து பறக்குதடி பொன்னும் பொடிமட்டை

2 மாட்டு வண்டி குதிரைவண்டி

மற்றுமுள்ள தட்டுவண்டி

நாட்டுவண்டி மகிமை போச்சு தங்கரத்தினமே

நாகரீக மிகவுண்டாச்சு பொன்னும் பொடிமட்டை

3 சைக்கிள் மோட்டாரு வண்டி

சரியான ரயிலுவண்டி

வைக்கும் பாரத்தையெல்லாம் தங்கரத்தினமே

மானே யிழுக்குதடி பொன்னும் பொடிமட்டை

4 மண்ணெண்ணெய் விளக்கெண்ணெய்

மற்றுமுள்ள தேங்கா யெண்ணெய்

...ஆவணக் காப்பக நூலகம்
184153
சென்னை-600 008

எண்ணெய் விளக்குப் போச்சு தங்கரத்தினமே
(இப்போ) எலக்ட்றிக்கு விளக்குண்டாச்சு பொன்னும்
[பொடி மட்டை

5 நெல்லுக் குத்துங் காலம் போச்சு
நேர்த்தியான ரைஸ்மில் லாச்சு
(அது) அல்லும் பகலரைக்குதடி தங்கரத்தினமே
(அது) அரிசியுமி பிரிக்குதடி பொன்னும் பொடிமட்டை

6 தந்தியுந்த பாலுமென்ன
தண்ணீருக் கப்பலென்ன
அந்த நாளிருந்ததுண்டோ தங்கரத்தினமே
(இந்த அதிசயத்தை யென்ன சொல்வேன் பொன்னும்
பொடிமட்டை

7 சினிமா பட முண்டாச்சு
தினுசுக்கொரு காட்சியாச்சு
பானம் பருகுதற்குத் தங்கரத்தினமே
(நல்ல) பைனுபிள் சோடாவாச்சு பொன்னும் பொடிமட்டை

8 வெள்ளைக்காரன் நாளையிலே
வெகுவித விநோதத்திலே
நல்ல நல்ல நேர்த்திபாரு தங்கரத்தினமே
நாடெங்கும் புதுமைகூறு பொன்னும் பொடிமட்டை

நாடக விகட ரஞ்சிதம் அல்லது, பபூன் பார்ட்
முதற்பாகம் முற்றிற்று.

ஹ

புத்தக விளம்பரம்.

T. K. சுந்தரம் கீர்த்தனை 2-பாகமும்	0 12 0
ஏரோப்பிளான் சிங்காரப் பாட்டு	0 1 0
மதுரை கானலங்காரம்	0 1 0
சுருளிநாதன் பஜனைப் பாட்டு	0 2 0
பவுன் பாட்டு 1, 2 பாகம்	0 4 0
மதுரகானம் 1, 2 பாகம்	0 4 0
பூங்காவிநோத சிங்காரப் பாட்டு 1, 2 பாகம்	0 4 0
பாம்பாட்டி சித்தர் பாடல்	0 1 0
வைத்தியக் கும்மி	0 1 0
வேதாந்தக் கிளிக்கண்ணி	0 1 0
கட்டபொம்மு துரை பாதர் வெள்ளை சண்டை	0 1 0

மேற்கண்ட புஸ்தகங்களும் இன்னும் இதர புஸ்தகங்களும் தேவையுள்ளவர்கள் கீழ்கண்ட விலாசதாரிடம் நேரிலும் வி. பி. மூலமாயும் சகாயமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

எமது விலாசம்:-

பெ. கருப்பையா மணியகாரர்,

ஸ்டீல் டிரங்க் மெர்ச்செண்ட் & புத்தக வியாபாரம்,

புதுமண்டபம், மதுரை.